**செ. கு. எண்: 72**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 14.3.2013

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், அன்னை தெராசா நகரைச் சேர்ந்த திரு. பாலாஜி என்பவர் தனது மகள் செல்வி ரோகிணியுடன் 2.3.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் கள்ளிக்குப்பம் அருகே சென்று கொண்டிருந்த போது மாநகர அரசுப் பேருந்து மோதியதில், செல்வி ரோகினி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், பிச்சாண்டார்கோவில் கிராமம், உத்தமர்கோவில் மேம்பாலம் அருகில் சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் மீது 5.3.2013 அன்று அரசுப் பேருந்து மோதியதில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த ஈரோடு மாவட்டம், பள்ளிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவரின் மகன் வெள்ளியங்கிரி மற்றும் திரு. சின்னுசாமி என்பவரின் மகன் மணி ஆகிய இருவரும் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த ரோகினி, வெள்ளியங்கிரி மற்றும் மணி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்த ரோகினி, வெள்ளியங்கிரி மற்றும் மணி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**